දුරකථන ) 2698475
தொலைபேசி ) 2698490
Telephone ) 2698507

ෆැක්ස් ) 2692913
பெக்ஸ் ) 2693869
Fax )

විද්‍යුත් තැපෑල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ්අඩවිය )
இணையத்தளம் ) www.health.gov.lk
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේඅංකය )
எனது இல ) NCCP/GOSL/02/2019
My No. )

ඔබේඅංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி ) 22.01.2019
Date )

# සෞඛ්‍ය, පෝෂණහා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதாரம்,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition& Indigenous Medicine

**பொது சுற்றறிக்கை கடித இல: 02, 16, 2019**

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
சுகாதார மருத்துவ அதிகாரிகள்,
அனைவருக்கும்.

**உலக புற்றுநோய் தினம்- 2019 பெப்ரவரி 04**

புற்றுநோயானது தற்போது உலகம் முழுவதிலும் பாரிய பொது சுகாதார பிரச்சினை ஒன்றாக மாறியுள்ளதுடன், எதிர்காலத்தில் இந்நிலையானது மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டிலே உலகம் முழுவதிலும் 18.1 மில்லியன் புற்றுநோயாளர்கள் புதிதாக கண்டறியப்பட்டுள்ளதாகவும், 9.6 மில்லியன் பேர் புற்றுநோய் காரணமாக மரணித்துள்ளதாகவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. க்ளொபோகென் அறிக்கை - 2018 (GLOBOCAN - 2018) இன் பிரகாரம் எதிர்வரும் 20 வருட காலப் பகுதியினுள் புதிதாக இனங்காணப்படக் கூடிய புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை 29.5 மில்லியன் வரையில் அதிகரிக்கக் கூடும் எனவும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேற்படி விடயங்களைக் கவனத்திற் கொள்கையில் புற்றுநோயைத் தடுத்தல் மற்றும் ஆரம்பத்தில் இனங்காணல் என்பன தொடர்பான செயல்முறை நிகழ்ச்சித் திட்டங்களை அதிகமாகவும் மற்றும் துரிதமாகவும் மேற்கொள்ள வேண்டியுள்ளமை தெளிவாகின்றது.

தேசிய புற்றுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வெளியிடப்படுகின்ற புற்றுநோய் கண்காணிப்பு தரவு பற்றிய அறிக்கையின் பிரகாரம் இலங்கையினுள் 2011 ஆம் ஆண்டிலே புதிய புற்றுநோயாளர்கள் 17,482 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இது முறையே சனத்தொகையில் 100,000 பேருக்கான சராசரி விகிதம் 83.7 ஆகவும், வயது தரப்படுத்தப்பட்ட நிகழ்வு விகிதம் (Age Standardized Incidence Rate) 89.2 ஆகவும் காணப்படுகின்றது. பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் கடந்த சில ஆண்டுக் காலப் பகுதிகள் முழுவதும் இலங்கையில் இடம்பெறுகின்ற மரணங்களில் புற்றுநோய் காரணமாக இடம்பெறுகின்ற மரணங்கள் இரண்டாம் இடம் வகிக்கின்றன.

புற்றுநோய் காரணமாக ஒவ்வொரு நபரும் செல்வந்தர் வறியவர் என்ற பேதமின்றி ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கப்படலாம். அவ்வாறே புற்றுநோய் காரணமாக தனிப்பட்ட ரீதியில், குடும்ப ரீதியில் மற்றும் சமூக ரீதியில் ஏற்படக் கூடிய மோசமான பெறுபேறுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஆற்றல் அனைவரிடமும் உள்ளது.

ஒவ்வொரு ஆண்டிலும் பெப்ரவரி 04 ஆம் திகதியை உலக புற்றுநோய் தினமாக பிரகடனப்படுத்தி அனைவரும் புற்றுநோய் பற்றி விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் நோக்கமாக அமைவது, தடுத்துக்கொள்ளக் கூடிய புற்றுநோய்கள் காரணமாக மரணிக்கின்ற மில்லியன் கணக்கான மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு அரச மட்டத்திலும் அதே போன்று தனியார் மட்டத்திலும் செயற்பட்டு விழிப்பூட்டல் நிகழச்சித் திட்டங்கள் அடங்கலாக பல்வேறுபட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதாகும். 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான 3 வருட காலப் பகுதிக்குரிய உலக புற்றுநோய் தினத்தின் தொனிப்பொருளாக அமைவது ''நான் செயற்படுகிறேன், இன்று போன்றே நாளையும்'' என்பதாகும். உலக புற்றுநோய் தினத்தை நினைவுகூர்வதற்காக நேர்மறையான முறையிலும் மற்றும் திட்டமிட்டவாறும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதன் ஊடாக புற்றுநோயை வெற்றிகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். புற்றுநோயை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியமாக அமைவது,

- புற்றுநோய் காரணமாக அதிகமானோர் தமது வாழ் நாளிலே நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிப்புக்கு ஆளாகக் கூடியதாக இருப்பதனாலும்,
- புற்றுநோய் காரணமாக இடம்பெறக் கூடிய அனர்த்தத்தை குறைத்து உரிய காலத்திற்கு முன்னர் இடம்பெறக் கூடிய மரணங்கள் பலவற்றினை தடுத்துக் கொள்வதற்கு தனிப்பட்ட மட்டத்தில், சமூக மட்டத்தில் மற்றும் அரச மட்டத்தில் அமுல்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் பெரும்பாலும் பங்களிப்புச் செலுத்தக் கூடியதாக அமைகின்றமையாலும்,
- உலகம் முழுவதிலும் நிகழுகின்ற மரணங்களுக்கு புற்றுநோயானது பிரதான காரணியொன்றாக அமைகின்ற போதிலும், அந்த மரணங்களில் 1/3 இனை தடுத்துக்கொள்ளக் கூடியதாக உள்ளமையாலும், முற்கூட்டியே கண்டறியப்பட்டால் அதிகமாக புற்றுநோய்களை முழுமையாக குணப்படுத்தக் கூடிய வாய்ப்பு உள்ளமையாலும்,
- புற்றுநோய் தொடர்பான அனைவரதும் அறிவினை அதிகரித்தல் மற்றும் புற்றுநோய் ஏற்படுவதற்கும் அதே போன்று சிகிச்சையளிப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் காலம் வரையில் உலகம் முழுவதிலும் வருடமொன்றிற்கு மில்லியன் கணக்கான மக்கள் அநாவசியமாக புற்றுநோய் காரணமாக மரணிப்பதனாலுமாகும்.

2019 உலக புற்றுநோய் தினத்தைக் கொண்டாடும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் போது பின்வரும் குறிக்கோள்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**புற்றுநோயை தடுத்துக்கொள்ளல்**

- தவறான வாழ்க்கை முறைக்கும் புற்றுநோய்க்கும் இடையில் காணப்படும் தொடர்பு பற்றி நபர்கள் மற்றும் சமூகத்தை விழிப்பூட்டுவதன் ஊடாக அவர்களை நல்லவற்றின் பக்கம் கவனம் செலுத்த வைப்பதற்கும், தவறானவற்றில் இருந்து விடுபடுவதற்கும் தூண்டுதல். நல்ல வாழ்க்கை முறையின் ஊடாக அனைத்து விதமான புற்றுநோய்களிலும் 1∴3 இனை தடுத்துக்கொள்ள முடியும் என்ற செய்தியை சமூகத்திலே பிரபல்யப்படுத்தல் வேண்டும்.

**சுகாதாரத் தன்மைமிக்க பாடசாலை கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குதல்**